1990 ஆகஸ்ட் 21]

(இ) மேல்நிலை வகுப்பு கேள்வித்தாள்களில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களினால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு.

10–30 மணி

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பிளஸ் 2 வகுப்புகளில படிக்கும்படியான பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் ஒரு கடுமையான குழப்பத்திற்குள்ளே சிக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே கொடுத்து வந்த கேள்வித் தாள்களில் சில புதிய மாற்றங்களை உருவாக்கி, ஏற்கெனவே அவர்கள் அந்த கேள்வித் தாள்களில் பதில் எழுதுவதற்கும், அவர்களுடைய சாய்சை உபயோகப் படுத்துவதற்கும் இருந்த சந்தர்ப்பங்களை இழக்கும்படியான நிலை ஏற்பட்டு, அதனால் தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் அவர்கள் பதில் எழுதி, மார்க் பெற்று, வெற்றி பெறுவது சாத்தியமல்ல என்ற பயமும் குழப்பமும் அவர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. பரவலாக எல்லா இடங்களிலும் இது வந்திருக்கிறது. நேற்றையதினம் எனக்கு மாலையில் கோவையிலிருந்து கொடுக்கப்பட்ட டெலிபோன் செய்தியில் 62 பள்ளிகளில் அந்த மாவட்டத்தில் மட்டும் வேலை நிறுத்தம் பண்ணியிருக்கிறார்கள். அவர்களை அமைதியாகவும், கட்டுப்பாடாகவும் இருந்து அரசினுடைய உத்தரவை எதிர்பார்க்கும்படி நான் கேட்டுக் கொண்டேன். நீலகிரி மாவட்டத்தில் 17 பள்ளிகள் மூடப்பட்ட செய்தி வந்திருக்கிறது. இதே மாதிரி மற்ற மாவட்டங்களிலும் ஏற்பட்டிருக்கிறது. பிறகு டைரக்டர் ஆப் எக்சாமினேஷன்ஸ் அவர்கள் சில அறிக்கைகளை வெளியிட்டு இருக்கிறார்கள். அந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கமும் சரியான விளக்கமாக, அவர்களுடைய சந்தேகத்தையும், பயத்தையும் போக்கும்படியாக தெளிவாக இல்லை. அரை குறையாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். கோவையில் இருக்கிற முதன்மை கல்வி அதிகாரியை நான் நேற்று முன்தினம் கேட்டேன். அந்த அறிக்கையின் நடைமுறைப்படி என்ன தெளிவு ஏற்படும் என்பது எழுத்து மூலமாக அவர்கள் கையில் கிடைக்கவில்லை. அதனால் ஆபத்து ஒன்றும் வராது என்று பொதுவாகத்தான் அவரால் சொல்ல முடிந்தது. எனவே, இந்த பயத்தைப் போக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுடைய இன்றைய வேண்டுகோள் என்னவென்றால் பழையமுறையில் அவர்களுடைய கேள்வித்தாள்களை அமைத்து கொடுக்க வேண்டும் என்பதுதான். அரசும் அதற்கு உத்தரவிட்டு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைக் கொஞ்சம் தெளிவாக, சந்தேகத்திற்கு இடமின்றி, குழப்பத்திற்கு இடமின்றி, வேறு யாரும் அந்த மாணவர்களிடத்தில் அப்படிப்பட்ட குழப்பத்தை, சந்தேகத்தை தூண்டுவதற்கு இடமளிக்காதபடி, அதுபற்றி மாண்புமிகு கல்வி

அமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டுமென்று நான் தங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி கல்வியில் பாடத்திட்டங்கள் மேலும் உயர்த்தப்பட வேண்டுமென்பது ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்னால் அரசாங்கத்தால் கருதப்பட்டு, மூன்றாண்டுகளுக்கு முன்னால் புதிய பாடத் திட்டங்கள், சற்று விரிவான பாடத்திட்டங்கள் சேர்க்கப்பட்டு, அந்தப் புதிய பாடத் திட்டங்கள் நடைமுறைக்கு வருகிறபோது எந்தவொரு பாடப் பகுதியும் கேள்வியிலிருந்து விடுபடக்கூடாது என்ற ஒரு நோக்கத்தோடு, எந்தவொரு பகுதியையும் மொத்தமாக விட்டுவிட்டு தேர்வு எழுதக்கூடிய வாய்ப்பைத் தந்தால் புதிய பாடத் திட்டத்தில் தகுந்த அளவிற்கு மாணவர்கள் அக்கறை செலுத்தமாட்டார்கள் என்பதற்காக அதற்குரிய முறையில் கேள்வித்தாள் நிபுணர்களால், அந்தத் துறையைச் சேர்ந்த வல்லுநர்களால் வகுக்கப்பட்டு, அதுதான் அனுப்பப்பட்டது. அந்தக் கேள்வித் தாள் ஏற்கெனவே உள்ள அதே மாடலில் இல்லாத காரணத்தால், மாடல் கொஸ்டின் பேப்பர் வேறுபட்ட காரணத்தால், மாணவர்களில் சிலபேருக்கு இது கடினமான கேள்வித் தாள் என்ற எண்ணம் ஏற்பட்டு, இந்தக் கேள்வித் தாள் கடுமையானது, அரசாங்கம் இதை கவனிக்க வேண்டும் என்ற முதல் குரல் வந்தவுடனே, நம்முடைய முதலமைச்சர் அவர்களே கூடக் கல்வித் துறை செயலாளரை அழைத்து, இப்படி வருகிறதே இது என்னவென்று கேட்டு, இது புதிய பாடத்தின்படி வந்த அமைப்பு என்று சொன்னவுடன், இருந்தாலும் பழைய முறையிலேயே பாடக் கேள்விகள் அமைவது நல்லது என்று ஆலோசனைகள் வழங்கப்பட்டு, கல்வித்துறையினர் கடந்த காலத்தில் எந்த முறையில் கேள்வித் தாள்களை அமைத்திருந்தனரோ அதே முறையில் இப்போதும் அமைத்துக் கொள்ளுங்கள் என்று தெரிவித்து, அது தொடர்பாகப் பள்ளித் தேர்வுத் துறை இயக்குநர் திரு. முருகண்ணன் அவர்கள் ஆகஸ்ட் 16 ஆம் நாளன்று ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்கள். பிளஸ் 2 மாணவர்களுக்கு கணிதம், தாவரவியல் ஆகியவற்றில் இரண்டு மதிப்பெண்கள் கொண்ட கேள்விகள் தேர்வு செய்து எழுதும் முறையில் மாற்றியமைக்கப்படும். தேர்வு செய்து எழுதும் முறை என்றால் சாய்சோடு அமைக்கப்படும் என்று பொருள். இவ்வாறு அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. அதன்படி மாற்றியமைக்கப்பட்ட பகுதிகள் ஆய்வு அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

*10-35 மணி*

தேர்வு, கேள்வித்தாள் முதலானவற்றைக் குறிக்கிற அலுவலர்களுக்கு இந்த முடிவு அனுப்பப்பட்டு உள்ளது. மற்ற பாடங்களில், சாய்ஸ் கேள்விகள் அதாவது எதை வேண்டுமானா

லும் தேர்ந்து எழுத, அதாவது ஆப்ஷன் கேள்விகள் பழைய வினாத்தாளில் உள்ளபடியே அமைக்கப்பட்டுள்ளன. எனவே, இந்தப் பாடங்களில் பழைய மாதிரி வினாத்தாளில் மாற்றம் செய்ய வேண்டியதில்லை என்றும், ஏற்கனவே உள்ள முறை நூற்றுக்கு நூறு அப்படியே பின்பற்றப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டு இருக்கிறது.

இப்போது மாணவர்களில் சிலர் இப்படிப்பட்ட ஐயங் களைத் தூண்டிவிட்டு ஒரு கிளர்ச்சியை நடத்துவது ஒரு பெரிய, தாங்கள் தனிப்பட்ட முறையில் தனித் தலைமை, செல்வாக்கு பெறுவதற்கு ஒரு வாய்ப்பு என்பதுபோல ஒரு உணர்வு இருக்கிறது. ஏன் என்றால், இது எல்லாம் தெளிவுபடுத்தப்பட்டு, பெரும் பாலும் அந்தத் துறையைச் சார்ந்த தலைமை ஆசிரியர்கள், பிற ஆசிரியர்கள் குழுக்களிலே பாடத் திட்டத்தைப் பற்றிச் சொல்லப்பட்ட கருத்துக்களும் கூட மறுபடியும் பரி சீலனை செய்யப்பட்டு, ஏதேனும் பாடத் திட்டங்களில் விடுபட வேண்டியது இருக்குமானால், கைவிடவேண்டியதிருக்குமானால் அதைக் கூடப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். பாடத் திட்டத்தைச் சுமையாக ஆக்குவது அரசாங்கத்தினுடைய நோக்கம் அல்ல. அதைப்போல கேள்வித்தாளை மாணவர்கள் அச்சம் அடைகிற அளவுக்கு கடுமையாக்குவது அரசாங்கத்தினு டைய நோக்கம் அல்ல. மாணவர்களுக்கு, ஏற்கனவே உள்ள, அவர்களுக்கு திருப்தியான கேள்வித்தாள் எந்த முறையில் அமைக் கப்பட்டதோ, அதே முறையில், அமைக்கப்படும் என்றும், நான் இந்த அவையின் மூலமாக திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள் கிறேன். கேள்வித்தாளில் புதிய மாற்றங்கள் புகுத்தப்படமாட் டாது. (குறுக்கீடு). மற்ற பாடங்களிலும் ஏற்கனவே உள்ள முறைதான்.

(ஈ) கர்நாடக மாநிலம் உடுப்பியிலுள்ள சட்டக் கல்லூரியில் பயிலும் தமிழ்நாடு மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப் படுவது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இந்த மாதிரி வேளையிலே எங்களைக் கொஞ்சம் பேச விட வேண்டும். சண்டை போடுகிறவர்களை மாத்திரம் முதலிலே விட்டுவிட்டு, எங்களை கடைசியாகப் பேசவிடுவதைவிட, எங்களை முதலிலே பேசவிட்டுவிட்டு சண்டை போடுகிறவர்களை கடைசி யாகப் பேசவிட்டால் நன்றாக இருக்கும். எனவே, இந்த சீரோ அவரிலே, எங்களை முதலில் விட்டுவிட்டு, சண்டைபோடுகிறவர் களை, கடைசியாக விட்டுவிடுங்கள். நாங்கள் எல்லாம் நின்று கொண்டே இருக்க வேண்டியதாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளையிலேயிருந்து உங்களுக்கு முதலில் வாய்ப்பு அளிக்கப்படும்.